**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**Spl.S.C.No.1/2019**
**Prosecution Witness P.W. 30**

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. ராஜபதி | Calling | : ரியல் எஸ்டேட் |
| Father's name | : திரு. ஆறுமுகம் | Religion | : இந்து |
| Village | : பரமக்குடி | Age | : 52 |
| Taluk | : இராமநாதபுரம் | | |

நாள் - **21.01.2026**

**(1ம் எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, 2ம் எதிரி - ஆஜர்).**

**முதல் விசாரணை:**

நான் தற்போது பரமக்குடி, பாரதி நகர் மேற்கு, இராமநாதபுரம் மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ரியல்எஸ்டேட் மற்றும் கான்ட்ராக்ட் தொழில் செய்து வருகிறேன். 1ம் எதிரி எனது தங்கை, 2ம் எதிரி எனது தங்கையின் கணவர். பரமக்குடி, பாரதி நகர் மேற்கு, கதவு எண்.3/845, ரோஜா வீதி என்ற முகவரியில் உள்ள வீடு யாருக்கு சொந்தமானது என்று போலிசார் கேட்டனர், நான் அந்த வீடு எனது சகோதரியின் கணவர் ரவிக்குமாருக்கு சொந்தமானது என்றுசொன்னேன். அதில் வாடகைக்கு யார் குடியிருக்கிறார்கள் என்று கேட்டனர், சிவானந்தம் மற்றும் ஒரு நபர் குடியிருப்பதாக சொன்னேன். அவர்கள் ரூ.50,000/- முன்பணமும், ரூ.5,000/- வாடகையாகவும் கொடுக்கிறார்கள் என்றும் சொன்னேன். கீழ்தளத்தில் சுரேஷ் என்பவர் ரூ.50,000/- முன்பணமும், ரூ.5,000/- வாடகையாகவும் கொடுத்து வருகிறார் என்று சொன்னேன். கீழ்பகுதியில் பின்புறத்திலுள்ள வீட்டில் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் குடியிருந்து வருகிறார் என்றும், அவர் ரூ.50,000/- முன்பணமும், ரூ.5,000/- வாடகையாக கொடுத்து வருகிறார் என்றும் சொன்னேன்.நான் அதே வீட்டின் மேற்பகுதியில் குடியிருந்து வருவதாக சொன்னேன். நானும், அவர் ரூ.50,000/- முன்பணமும், ரூ.5,000/- வாடகையாக கொடுத்து வருவதாக சொன்னேன். வீட்டின் உரிமையாளர் ரவிக்குமார் என்பவரிடம் கொடுத்து வருவதாக சொன்னேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் நான் ரவிக்குமார் என்பவரிடம் முன்பணம் கொடுத்ததற்கான ஆவணத்தின் நகல் ஆகும், அதில் குடியிருப்பவர் என்ற பகுதியில் இருக்கும் கையொப்பம் எனது

கையொப்பம் ஆகும், அது **அ.சா.ஆ.42** ஆகும். அந்த வீட்டில் குடியிருக்கும் ஆசிரியர் பெயர் டெய்சி ஆகும். வீட்டிற்கு மேல்பகுதியில் ஜாபர்அலி என்பவர் குடியிருந்து வருகிறார். அவர் ரூ.10,000/- முன்பணமும், ரூ.1,000/- வாடகையும் கொடுத்து வருகிறார். மேற்படி பணத்தினை ரவிக்குமாரிடம் ஒப்படைத்துவிடுவேன். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1 ம் எதிரிக்கு இரண்டு பெண்பிள்ளைகள் என்றால் சரிதான். கமலி, கண்மணி என்பவர் அவர்கள் பெயராகும். 2006 ம் வருடத்தில் இருந்து 2011 ம் வருடம் முடிய மேற்படி இரண்டு பெண்பிள்ளைகளுக்கும் பிறந்தநாள் விழா எங்கள் உறவினர்களை அழைத்து சிறப்பாக நடந்தது என்றால் சரிதான். மேற்படி பிறந்தநாள் விழாவில் என்னுடைய அண்ணன் தங்கராஜ், அக்கா கலைச்செல்வி, கஸ்தூரி, உறவினர்கள் பேச்சியம்மாள் மற்றும் சிலர் கலந்து கொண்டனர். பிறந்தநாள் விழாவில் ஒவ்வொரு பிள்ளைக்கும் தலா இரண்டு பவுன் வீதம் செய்முறையை ஒவ்வொரு வருடமும் செய்தேன். மற்றவர்களும் தங்கநகை அன்பளிப்பாக பிறந்தநாள் விழாவில் கொடுத்தார்கள்.

<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

அ.சா.29 சுரேஷ் என்பவர் 2007 ஏப்ரல் முதல் அங்கே குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். ஆசிரியர் டெய்சி என்பவர் 2007 ஜனவரி முதல் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். அ.சா.28 சிவானந்தம் 2008 மார்ச் முதல் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். ஜாபர்அலி என்பவர் 2008 ல் இருந்து குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அ.சா.ஆ.40 ஆன சிவானந்தம் எழுதிக் கொடுத்த அட்வான்ஸ் இரசீதின் நகல் என்றால் சரிதான்.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.01.22 10:05:34 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.